செய்தி வெளியீடு எண். 343 நாள்: 19.07.2019

# ஆடிக்கிருத்திகை திருவிழாவை முன்னிட்டு, திருவள்ளூர் மாவட்டத்தில் 26.07.2019 அன்று ஒரு நாள் உள்ளூர் விடுமுறை - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்.இ.ஆ.ப., அவர்கள் தகவல்

திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணியில் அமைந்துள்ள திருமுருகப்பெருமானின் ஐந்தாம்படை வீடான அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் வரும் 26.07.2019 அன்று (வெள்ளிக்கிழமை) ஒருநாள் நடைபெற இருக்கும் ஆடிக்கிருத்திகை திருவிழாவை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுகிறது.

இந்த உள்ளூர் விடுமுறை நாட்கள் செலாவணி முறிச் சட்டம் 1881 (Negotiable Instrument Act 1881)-ன் கீழ வராது என்பதால் இம்மாவட்டத்தில் உள்ள கருவூலங்களும், சார்நிலைக் கருவூலங்களும் அரசு பாதுகாப்புக்கான அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு (26.07.2019) தேதியில் செயல்பட வேண்டும். இந்த விடுமுறை நாளை ஈடுசெய்யும் பொருட்டு 17.08.2019 (சனிக்கிழமை) அன்று பணி நாளாக அறிவிக்கப்படுகிறது.

இந்த உள்ளூர் விடுமுறையானது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் பொருந்தும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**